ஜீவரேகாவின் கணவர் குடிப்பழக்கம் மறைய... பெருமளஞ்சி பரிமளம் அம்மாவுக்கு அவர்கள் கணவருடைய பென்சன் பணம் கிடைக்க.... சகோதரி. ராணி அவர்கள் கணவர் இரட்சிக்கப்பட...

பணித்தளம் : **அத்தியூத்து** **மார்ச் 29**

சகோ. சின்னபண்டாரம் வெட்டு நிற்க... சகோதரி. சின்னபிள்ளை பிசாசு பிடியில் இருந்து விடுதலை பெற... சகோதரி. சுபா ஆசிரியர் வேலை கிடைக்க... சகோ. கருப்பராஜ் கெட்டகனவு நீங்க.... இரவு பயம் நீங்க.... சிறுவன் கருப்பன் வாய் பேச.... சகோதரி. பட்டு நெஞ்சுவலி நீங்க.... சகோதரி. வண்ணச்சி கடன் பிரச்சனை மாற... சகோதரி. கோமு முட்டு எலும்பு தேய்வு சரியாக, வலி நிற்க... சகோ. சுப்பிரமணியன் குடிப்பழக்கம் மாற... சகோதரி. முத்து பிசாசு பிடியில் இருந்து விடுதலை பெற... சகோதரி லலிதா புஷ்பம் எலும்பு பெலவீனம், குடல் இறக்கம் சரியாக... சகோ. பிரகாஷ் மரண பயம் நீங்க... சகோ. ஜேம்ஸ் 2 வருட சம்பளபாக்கி வர... சகோதரி. நந்தினி, வசந்தி திருமணம் நடைபெற... சகோ. வெற்றிதுரை மனைவியை நேசிக்க... சகோதரி. வெள்ளைத்தாய் கருப்பு பத்து மறைய... சகோதரி. கணபதி சரீரத்தில் ஊரல் நிற்க... அத்தியூத்தில் ஆலயம் கட்ட நல்ல இடம் கிடைக்க...

பணித்தளம் : **வடமலாபுரம்** **மார்ச் 30**

சகோதரி. மரியசெல்வகம், மேல்தாய் பிசாசு பிடியில் இருந்து விடுதலை பெற... கோமதி அம்மா சரீர பலவீனத்தில் இருந்து விடுதலை பெற.... சகோதரி. சாராள் வீட்டில் கடன் பிரச்சனை நீங்க... நமது மிஷனெரி சகோதரி. பூங்கொடிக்கு 20 நாளாக இருக்கும் தலைவலி நீங்க... சகோதரி. முத்து துரைச்சியின் மகள் பிசாசின் போராட்டத்திலிருந்து சுகம் பெற... சகோ. மனோராஜ் இவர்கள் குடும்பத்தில் அனைவரும் காய்ச்சலிலிருந்து விடுதலை பெற... மிஷனெரி மகனுக்கு நல்ல வேலை கிடைக்க....

பணித்தளம் : **திருவேங்கடம்** **மார்ச் 31**

இங்கு நடைபெறுகிற அற்புதத்தின் மாலை ஜெபத்திற்கு அநேகர் கலந்து கொள்ள... சகோதரி. மேரிக்கு திருமண காரியம் கைகூடிவர... சகோதரிகள் விஜி, ரோசி, கலைச்செல்வி இவர்கள் ஞானஸ்நானத்திற்கு ஒப்புக்கொடுக்க.... கணவரை இழந்திருக்கும் சகோதரி. வெற்றிச்செல்வியை தேவன் ஆறுதல்படுத்த.... சின்னகாளான் பட்டியில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட 70க்கு மேலான ஜனங்களுக்காக... சகோதரி. மாரியம்மாளின் காலிலுள்ள வீக்கம் நீங்க.... இயேசுவை ஏற்றுக்கொள்ள... சகோதரி. அன்னமேரிக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க... சகோ. பால்துரை குடும்பத்தில் பிரச்சனை மாற... சமாதானம் உண்டாக... சகோதரி. ரெபேக்காள் +2வில் நல்ல மதிப்பெண் பெற.... சகோ. அந்தோணி செல்வம் திருமண காரியத்திலுள்ள தடைகள் மாற.... சகோ. வெள்ளைச்சாமி குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற... சகோ. கலைச்செல்வன் கல்லூரி படிக்க.... தலைவன்பட்டி சகோ. கலைச்செல்வன் இயேசுவை ஏற்றுக்கொள்ள.....

## *தூத்துக்குடியில் அற்புத உபவாச நாள்*

நாள் : மார்ச் 27 கடைசி செவ்வாய்
நேரம் : காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய
இடம் : காமராஜர் திருமண மண்டபம்,
பிரையண்ட் நகர், 5வது தெரு மெயின், தூத்துக்குடி.

**கிருபையின் ஊழியங்களின் முப்பெரும் முகாம் 2012**

நாள் : **2012 மே 17, 18, 19 – வியாழன், வெள்ளி, சனி** இடம் : **கன்னியாகுமரி**

ஜெபியுங்கள்! ஆயத்தப்படுங்கள்!!



# நான் என்ன செய்ய வேண்டும்?

**தொடர் - 42**
மார்ச் 2012

*தொகுப்பு :* **Dr. B. வில்லியம் தர்ம ராஜா**

**பிரசங்கி**

2051 உன் பிரயாசத்திலே மகிழ்ச்சியாயிரு (5:19)
2052 வாழ்வு காலத்தில் நன்மையை அநுபவித்திரு; தாழ்வு காலத்தில் சிந்தனை செய் (7:14)
2053 உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள் மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய் (11:1)
2054 விருந்து வீட்டுக்குப் போவதிலும் துக்கவீட்டுக்குப் போவது நலம்; இதிலே எல்லா மனுஷரின் முடிவும் காணப்படும் (7:2)
2055 மூடரின் பாட்டைக் கேட்பதிலும், ஞானியின் கடிந்து கொள்ளுதலைக் கேட்பது நலம் (7:5)
2056 பெருமையுள்ளவனாயிராதே (7:8)
2057 பொறுமையுள்ளவனாயிரு (7:8)
2058 உன் மனதில் சீக்கிரமாய்க் கோபங்கொள்ளாதே (7:9)
2059 உன்னை அதிக ஞானியாக்காதே; அதிக பேதையுமாயிராதே (7:16,17)
2060 சொல்லப்படும் எல்லா வார்த்தைகளையும் கவனியாதே; கவனித்தால் உன் வேலைக்காரன் உன்னை நிந்திப்பதைக் கேள்விப்பட வேண்டியதாகும் (7:21)
2061 ஞானமுள்ளவனாயிரு; அது உன் முகத்தைப் பிரகாசிக்கப் பண்ணும்; உன் முகத்தின் மூர்க்கம் மாறும் (8:1)
2062 ராஜாவின் கட்டளையைக் கைக்கொண்டு நட (8:2)
2063 நீ ராஜாவின் சமூகத்தை விட்டு விலகத் துரிதப்படாதே (8:3)
2064 பொல்லாத காரியத்திலே பிடிவாதமாய் நில்லாதே (8:3)
2065 ஏழையின் ஞானத்தை அசட்டை பண்ணாதே (9:16)
2066 ஏழையின் வார்த்தைகளைக் கேட்காமலிராதே (9:16)
2067 ஞானிகளுடைய அமைதியான வார்த்தைகளைக் கேள் (9:17)
2068 மதியீனனாயிராதே; அது உன் பேரை நாறிக் கெட்டுப்போகப்பண்ணும் (10:1)
2069 அதிபதியின் கோபம் உன்மேல் எழும்பினால், உன் ஸ்தானத்தை விட்டு விலகாதே (10:4)
2070 ஒரு காரியத்தைச் செவ்வையாய்ச் செய்ய ஞானத்தைப் பிரயோகி (10:10)
2071 அலப்பு வாயனாயிராதே (10:11)
2072 உன் வாய்மொழிகள் தயையுள்ளவைகளாயிருப்பதாக (10:12)
2073 மிகுதியாய் பேசாதே; அப்படிப்பட்டவன் மூடன் (10:14)
2074 ராஜாவை உன் மனதிலும் நிந்தியாதே; ஐசுவரியவானை உன் படுக்கையிலும் நிந்தியாதே (10:20)
2075 உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும் உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு (11:10)
2076 வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை (12:1,7)

**உன்னதப்பாட்டு**

2077 நீ தேவனுடைய பார்வையில் பழுதொன்றுமில்லாதிருப்பாயாக (4:7)

2078 நீ தேவனுடைய இருதயத்தைக் கவர்ந்து கொள்வாயாக (4:9)

2079 நீ தேவனுக்கு சகலவித அருமையான கனிகளையும் புசிக்கக்கொடு (4:16, 7:13)

2080 நீ உன் நேசருடையவனாயிரு (6:3)

2081 தேவனுக்கு மனமகிழ்ச்சியை உண்டாக்கு (7:6)

**ஏசாயா**

2082 உன்னை வளர்த்து ஆதரித்த கர்த்தருக்கு விரோதமாய்க் கலகம் பண்ணாதே (1:2)

2083 அறிவில்லாமலும் உணர்வில்லாமலும் இராதே (1:3)

2084 உனக்குச் செவிகொடாதபடிக்குக் கர்த்தருடைய முகத்தை உனக்கு மறைக்கும் பாவங்களைச் செய்யாதே (1:4, 59:2)

2085 அக்கிரமஞ் செய்யாதே (1:4, 31:2, 59:2)

2086 பொல்லாதவனா(ளா)யிராதே (1:4)

2087 கேடு உண்டாக்காதே (1:4)

2088 கர்த்தரை விட்டு பின்வாங்காதே (1:4)

2089 கர்த்தரை விட்டு விலகிப்போகாதே (1:5, 28)

2090 கைகளின் கிரியைகளையும், விரல்கள் உண்டு பண்ணினதையும் பணிந்து கொள்ளாதே (2:8)

2091 கர்த்தருடைய வேதத்தை வெறுக்காதே (5:24)

2092 பரிசுத்தருடைய வசனத்தை அசட்டை பண்ணாதே (5:24)

2093 கர்த்தரைப் பரீட்சை செய்யாதே (7:12)

2094 மனுஷரை விசனப்படுத்தாதே; தேவனையும் விசனப்படுத்தாதே (7:13)

2095 சேனைகளின் கர்த்தரைத் தேடாமலிராதே (9:13)

2096 உன் பெலமாகிய கன்மலையை நீ நினையாமலிராதே (17:10)

2097 உன்னை உண்டாக்கின உன் இரட்சிப்பாகிய தேவனை மறவாதே (17:10, 51:12)

2098 உண்டாக்கினவரைக் குறித்து, "நீர் என்னை உண்டாக்கினதில்லை" என்று சொல்லாதே (29:16)

2099 உருவாக்கிவரைக் குறித்து, "அவருக்குப் புத்தியில்லை" என்று சொல்லாதே (29:16)

2100 கர்த்தர் இல்லாத ஆலோசனை வேண்டாம் (30:1)


**விருதுநகர் மாவட்டம் ஏழாயிரம் பண்ணை**

*தேவனுடைய கூடாரத்தில்*

**திறப்பின் வாயில் ஜெபம்**

**2012 மார்ச் 28 கடைசி புதன் – காலை 10 மணி முதல் மாலை 3 மணி முடிய**

*நீங்களும் வாருங்கள்! கலந்து கொள்ளுங்கள்! இயேசு உங்களுக்கு அற்புதம் செய்வார்!!*

*நேரில் கலந்து கொள்ள முடியாதவர்கள் உங்கள் ஜெப விண்ணப்பங்களை எங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியில் அனுப்பலாம்.*

**தேவனுடைய கூடாரம்,** மெயின் ரோடு, ஏழாயிரம்பண்ணை–626 201. போன் 04562–258194




இவர்கள் படிப்பிற்காக... வேலை வாய்ப்பிற்காக... சகோ. மாடசாமி, சகோதரி செண்பகவல்லி இவர்கள் குடும்பம் இரட்சிக்கப்பட... ஜெபவீடு கட்ட தடைகள் மத்தியிலும் தண்ணீர் கொடுக்கிற குடும்பம் ஆசீர்வதிக்கப்பட...

பணித்தளம் : **பேட்மாநகரம்** **மார்ச் 24**

சகோ. முத்து அவர்களுடைய கடன் பிரச்சனை மாற... ஆலயத்திற்கு வர... சகோ. நைனார் அவர்கள் குடிப்பழக்கத்திலிருந்து தேவன் விடுதலை கொடுக்க... சகோ. காசி என்ற பர்னபாஸ் அவர்களுக்கு வீடு கட்ட பணத்தேவைகள் சந்திக்கப்பட... சகோ. தர்மராஜுக்கு வயிற்றுப் பகுதியிலிருள்ள நோய் குணமாக... இரட்சிக்கப்பட சகோ. ஹெரால்டு விக்டர் அவர்கள் நுரையீரல் வீக்கத்தினால் கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் பரிபூரண சுகம் கிடைக்க... சகோ. ஜோசப் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற... இரட்சிக்கப்பட... சகோதரி. லட்சுமி குடும்பத்தில் காணப்படுகிற கடன் பிரச்சனை மாற... சகோதரிகள் வனிதா, புஷ்பம்மாள் ஆகியோர் ஆராதனையில் கலந்து கொள்ள... சகோ. மில்லர் தர்ஷீஸ் அவர்கள் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட... சகோதரி. ஜெய்னும் பீவி அவர்களுக்கு மூளையில் இருக்கும் கட்டி ஆப்ரேஷன் (3 மணி நேரம்) நடக்க இருக்கிறது. தேவனுடைய கரத்தின் வல்லமை வெளிப்பட...

பணித்தளம் : **தாதன்குளம்** **மார்ச் 25**

நமது ஊழியரின் மகன் ஜெபஸ்டின் 10ம் வகுப்பு தேர்வில் அதிக மதிப்பெண் பெற... சகோதரி. சித்ராவின் குடும்பம் இரட்சிக்கப்பட... சினார் குளத்தில் நடைபெறும் ஆராதனைக்கு உள்ள தடைகள் நீங்க... சேரகுளத்தில் காணப்படும் தடைகள் மாற... சகோதரி. கோயில்பிள்ளையின் கணவருக்குக் காணப்படும் பலவீனங்கள் மறைய... சகோதரி. சின்னதாயிக்கு காணப்படும் தொண்டைவலி மறைய.... சகோதரி. பியூலாவின் கல்வியை தேவன் ஆசீர்வதிக்கப்பட... சகோதரி. ஜெயாவின் மளிகை கடை ஆசீர்வதிக்கப்பட... சகோதரி. ஜென்சி படிப்பை தேவன் ஆசீர்வதிக்க... சகோதரி. மெர்லின் சரீரத்தில் காணப்படும் பலவீனங்கள் மறைய...

பணித்தளம் : **தூத்துக்குடி ரூரல்** **மார்ச் 26**

சகோதரி. கரோலினுக்கு 6 மாதமாக இருமல் மூச்சுவிட கஷ்டமாயிருக்கிறது. இவர் பூரண சுகம் பெற... சகோதரி. தேவகிருபைக்கு மூட்டு வலிகள் நீங்க... சகோதரி. ரெங்கநாயகியின் குடும்பபிரச்சனை நீங்க... குடும்பத்தில் சமாதானம் விளங்க... ஜேஸ்மின், சகோதரிகள் ஜெபா, செல்வி, பாலின்கமல் இவர்களுடைய திருமணத்திற்காக...

பணித்தளம் : **பண்ணைவிளை** **மார்ச் 27**

வாலிப பெண்கள் ஜெபக்குழுவிற்குக் கடந்து வருகிற வாலிப பிள்ளைகள் கர்த்தருக்குள் பலப்பட.... கல்வி பெருக... சகோதரி. மேரி அக்காவிற்கு வேலை கிடைக்க... இறுதி ஆண்டு படிக்கும் பிள்ளைகளுக்கு Project சிறப்பாக முடிக்க... ராஜேஷ் என்ற தம்பிக்கு தொண்டையில் சதை வளர்ந்து உள்ளது. இது மாற... சகோதரி. ஏஞ்சலுக்கு திருமண காரியம் நடைபெற... தேவைகள் சந்திக்கப்பட... சகோதரி. கிளாரியாவின் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட... சகோ. மோசஸ்க்கு வேலை கிடைக்க... திவ்யா என்ற 3 வயது மகள் கண்ணில் கட்டி உள்ளது. கண் நன்றாக தெரிய... சகோதரிகள் லைசா, ராதிகா, அன்னமேரி, பாக்கியசெல்வி, ஜோதி, சரண்யா, ஜெகதா, சுசிலாராணி இவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க....

**திருநெல்வேலி மாவட்டம்**

பணித்தளம் : **அழகப்பபுரம்** **மார்ச் 28**

சகோதரி. மரகதம் நன்றாக படிக்க... சகோதரி. பாலகிக்கு நர்ஸ் வேலை கிடைக்க... சகோதரி. கனகாவிற்கு வளர்ந்து வரும் கட்டி மறைய... சகோ. சேவியர் அவர்களுக்கு இருக்கிற நரம்பு தளர்ச்சி மறைய... சகோதரி. செல்வம் அவர்களுக்கு இலவசமாக வீடு கட்ட உதவித் தொகை சீக்கிரமாய் கிடைக்க... சகோதரி. வனிதாவின் முதல் குழந்தை சுகமாய் பிரசவிக்க... சகோதரி.

குடிப்பழக்ங்கம் மாற... சிறுவன் வெற்றி அழகன் நன்றாக வாய் பேச... 2012ம் வருடத்தில் 25 பேருக்காவது ஞானஸ்நானம் கொடுக்க... சகோதரி. சுந்தரியின் கணவர் மலைச்சாமி தனியாக விட்டுவிட்டு எங்காவது தெரியாமல் போய்விடுகிறார். இவர் வீட்டில் இருக்க.... பிரிந்திருக்கும் குடும்பங்கள் சகோ. ஜீவானந்தம்–முத்துலட்சுமி, சகோ. தங்கபாண்டி – சித்திரா, சகோ. முருகன் – பத்மா, சகோ. பெருமாள் – வள்ளி, சகோ. முனியாண்டி –மகாலட்சுமி இவர்கள் ஒன்று சேர்ந்து வாழ

**திருப்பூர் மாவட்டம்**

பணித்தளம் : **தொட்டிப்பாளையம்** **மார்ச் 18**

விசுவாசத்தில் வளர்ந்து வரும் சகோதரிகள் லீலாவதி, ஈஸ்வரி, லட்சுமி, ரஞ்சிதா ஆகியோரின் கணவர்கள் இரட்சிக்கப்பட்டு மனந்திருந்த... சகோதரி. தெய்வாள் இரட்சிக்கப்பட்டு மனந்திரும்ப... தடைகள் மாற... சகோதரி. ரெபேக்காளின் கால் முறிவில் இருந்து தேவன் பரிபூரண சுகம் கொடுக்க.... ஆராதனைக்கு வராமல் இருக்கும் சகோதரிகள் சுதா, நதியாவின் தடைகள் நீங்க...

**மதுரை மாவட்டம்**

பணித்தளம் : **திரளி** **மார்ச் 19**

புதியதாக கட்டப்பட்டுள்ள ஆலயம் ஆத்துமாக்களால் நிரப்பப்பட... சகோதரிகள் மலர், நித்யாவிற்கு சுகப்பிரசவம் நடக்க... சகோ. ரோஜாவின் கணவருக்கு J.C.B. வண்டி ஓட்டும் வேலை கிடைக்க...

**ஈரோடு மாவட்டம்**

பணித்தளம் : **ஊத்துக்குளி** **மார்ச் 20**

சகோ. பொன்னுச்சாமிக்கு விபத்தில் வலது காலில் எலும்பு முறிந்துவிட்டது. அது குணமாக... சகோதரி. ஜெயலட்சுமி – சகோ. சந்திரன் இந்த குடும்பத்திற்காக... இவர் குடிப் பழக்கத்தை விட்டுவிட... இவர்கள் பேரன் குபேரன் புத்திசுவாதீனம் மறைய... சகோ. வெள்ளைச்சாமி குடிப்பழக்கத்தை விட்டுவிட... தேவி ரைஸ்மில் நன்றாக நடக்க... சகோ. ராஜா & சகோதரர்கள் நடத்தும் வியாபாரம் நன்றாக நடக்க... ஊழியர் தங்குவதற்கு நல்ல வீடு கிடைக்க...

**தூத்துக்குடி மாவட்டம்**

பணித்தளம் : **ஆண்டாள் நகர்** **மார்ச் 21**

நமது மிஷனெரி நவநீதனுடைய பிள்ளைகளுக்கு அடிக்கடி நேரிடும் காய்ச்சல் வியாதியிலிருந்து பூரண சுகம் கிடைக்க... தேவன் ஞானத்தைக் கொடுக்க... சென்னையில் இருந்து சகோ. கந்தசாமி சீக்கிரத்தில் வீடு கட்ட... ஆலயத்திற்கு வர... சிறுவர் கூடுகைக்கு சிறுவர்கள் கடந்து வர... கல்லன்பரும்பு பகுதியில் ஊழியம் ஆரம்பிக்கப்பட... சிறுவர் கூடுகைக்கு எல்லா சிறுவர்களும் கடந்து வர... சகோதரி. சாந்தி சீக்கிரத்தில் குணமாக....

பணித்தளம் : **தாளமுத்துநகர்** **மார்ச் 22**

சகோதரி. தங்கமாரியின் அண்ணனுக்கும், அப்பாவுக்கும் இருக்கிற சுகவீனத்திலிருந்து கர்த்தர் விடுதலை கொடுக்க... சகோ. பிரேம்குமாரின் மகளுக்கு கர்ப்பத்தில் இருக்கிற பிரச்சனை மாறி சுகமான பிரசவத்தைக் கர்த்தர் கொடுக்க... சகோதரி. பத்மா குடும்பத்தை கர்த்தர் ஆசீர்வதிக்க... இங்கு தாளமுத்துநகர் பகுதியில் சமாதானம் காக்கப்பட...

பணித்தளம் : **ஸ்ரீமூலக்கரை** **மார்ச் 23**

இங்கு அரசுத்தேர்வு எழுதுகிற ஊழியரின் பிள்ளைகள் காளிதாஸ் (10ம் வகுப்பு), டேவிட் (+2) இருவரும் நல்ல மதிப்பெண்கள் எடுக்க... இங்கு பரமானந்தம் மனைவி, பிள்ளைகள் நல்ல சுகத்திற்காக... விவசாயத் தொழிலுக்காக... சகோதரி. தேவபாக்கியம் குடும்பத்திற்காக... விவசாயம் நல்ல முறையில் நடைபெற... திருப்புளியங்குடியில் நடைபெற்றுவரும் ஜெபவீடு கட்டுமான பணிக்காக... தேவைகள் சந்திக்கப்பட... இங்கு படிக்கிற பிள்ளைகள் தேவி, பிரபா, பிரியா, சர்மிளா



வாலிபர் பக்கம்

# நீ மாதிரியாயிரு

*சகோ. S. ஜெபராஜ்* President, Grace Ministries

கிறிஸ்துவுக்குள் அன்பான வாலிப சகோதர சகோதரிகளுக்கு இன்ப இயேசுவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். கடந்த இதழின் செய்தியின் மூலம் உங்களை ஒருவரும் அசட்டை பண்ணாதபடிக்கு நீங்கள் உங்கள் வார்த்தையிலும் நடக்கையிலும் எவ்வாறு மாதிரியாய் இருக்க வேண்டும் என்பதை தெளிவாக அறிந்து கொண்டீர்கள். அவைகளை உங்கள் அனுதின வாழ்க்கையில் நடைமுறைபடுத்தி சமுதாயத்திலும், திருச்சபைகளிலும், குடும்பங்களிலும் நண்பர் வட்டத்திலும் முன்மாதிரியாய் நடந்து கொள்ளுகிறீர்கள் என்று விசுவாசித்து தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். இந்த இதழில் அன்பில் மாதிரியாய் இருப்பதைக் குறித்து அறிந்து கொள்வது உங்கள் ஒவ்வொருவருக்கும் பயனுள்ளதாகவும் இயேசுவின் நாமத்திற்கு மகிமையாகவும் இருக்கும் என நம்புகிறேன்.

## அன்பில் மாதிரி

அப்போஸ்தலராகிய பரிசுத்த பவுல், தீமோத்தேயுவின் வாயிலாக இளைஞர்களுக்கு கொடுக்கிற மற்றுமொரு ஆலோசனை "நீங்கள் அன்பில் விசுவாசிகளுக்கு மாதிரியாய் இருங்கள். 1தீமோ. 4:12. "Be an example for the blievers in love". இன்றைக்கு 'அன்பு' என்ற வார்த்தையின் பொருளை புரிந்து கொள்ளாமல், சில தவறான சிந்தனையுடன் செயல்படுகிறவர்களாயிருக்கிறார்கள் அநேக இளைஞர்கள். ஒரு தாய் குழந்தையின் உறவை பாசம் எனலாம். நண்பர்களுக்குள்ளே உள்ள உறவை நட்பு எனலாம். கணவன் மனைவி உறவை நேசம் எனலாம். ஆனால் அன்பு என்பது யாரிடத்தில் காட்டமுடியாதோ, அவர்களிடத்தில் காட்டும் பாசம், நட்பு அல்லது நேசம் ஆகும். பரிசுத்த வேதம் கூறுகிறது : நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே தேவன் நம்மேல் வைத்த அன்பை விளங்கப்பண்ணினார். ரோமர் 5:8. நாம் தேவனுக்கு சத்துருக்களாயிருக் கையில் அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவரோடே ஒப்புரவாக்கப்பட்டோம். இதுவே இயேசுவின் கல்வாரி அன்பு.

ஆகையால் நீங்கள் அன்பிலே வேரூன்றி நிலைபெற்றவர்களாகி, கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ள வல்லவர்களாயிருங்கள். எபேசி. 3:17,18. முன்மாதிரியான கிறிஸ்தவ அன்பின் ஒரு பக்கம், தேவனிடத்தில் அன்பு கூறுவது. தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூறுவாயாக உபா. 6:5. இதன் மறுபக்கம் பிறரிடத்தில் அன்புகூறுவது, இயேசுவானவர் காட்டின மாதிரியான அன்பு, உன்னிடத்தில் நீ அன்பு கூறுவதுபோல பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக என்பது.

மனித அன்பு நிபந்தனைகளோடு கூடியதும், மற்ற மனிதர்கள் நடந்து கொள்ளும் முறையின் அடிப்படையிலும் மாறுகிற அன்பு. ஆனால் கடவுளின் அன்பு நிபந்தனையற்றது. (unconditional love) மற்றவர்களுக்கு ஒன்றைக் கொடுக்கும்போது அன்பு கூறாமலே கொடுக்கலாம். ஆனால் மற்றவர்களிடத்தில் அன்புகூறும்பொழுது கொடுக்காமலிருக்க முடியாது. பிறரிடத்தில் அன்பு கூறுதலின் உச்சமாக கல்வாரி சிலுவையில் இயேசு தன்னையே தியாக பலியாக ஒப்புக்கொடுத்தார். ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை. யோவா.

15:13. உங்களை சிநேகிக்கிறவர்களையே நீங்களும் சிநேகிப்பீர்களானால் உங்களுக்கு பலன் என்ன? மத். 5:46. உங்கள் சத்துருக்களை சிநேகியுங்கள் மத். 5:44. பகைவர்களிடத்தில் அன்பு காட்டுங்கள்.

அன்பின் தன்மைகளை 1கொரி. 13ம் அதிகாரத்தில் படிக்கிறோம். அன்புக்கு பொறாமை இல்லை, அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாது. அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது, அன்பு சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். இந்த தெய்வீக அன்பில் உங்களை காத்துக்கொள்ளுங்கள்.

இயேசுகிறிஸ்துவின் கற்பனைகளின்படி நடப்பதே அன்பு 2யோ. 6. நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களும், குற்றமில்லாதவர்களுமாயிருங்கள் எபே. 1:4. அன்பினால் ஒருவரையொருவர் தாங்குங்கள் எபே. 4:2. அன்புடன் சத்தியத்தைக் கைக்கொள்ளுங்கள் எபே. 4:15. அன்பினாலே பக்திவிருத்தி அடையுங்கள் எபே. 4:16. ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களுமாயிருந்து ஒன்றையே சிந்தியுங்கள் பிலி. 2:2. பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பை தரித்துக் கொள்ளுங்கள் கொலோ. 3:14. தேவனுடைய அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள் 2தீமோ. 1:7. ஒருக்காலும் ஒழிந்துபோகாத அன்பில் நீங்கள் மாதிரியாயிருங்கள்.

– தொடரும்

## *ஒரு மருத்துவர் தூத்துக்குடியில் தன் மருத்துவமனையில் வெட்டி கொல்லப்பட்டார்*

என்ன சொல்லுவது .... என்ன செய்வது? (தினமலர் 02-01-2012)
இந்த சம்பவத்தை ..... இந்த சமூகத்தை!
எதை எதையோ தாண்டி விட்டோம் எனும் மனுக்குலமே
இப்போதாவது நிறுத்து உன் கெக்கரிப்பை!
நட்சத்திரங்களை எண்ணுவேன் – அதிலே நடப்பேன்!
புதனிலே ஓடுவேன் வியாழனில் விளையாடுவேன் – என்றாயே?
உன்னுள்ளுள்ள பாவமிருகத்தை!
உன்னாலே கட்டுவிக்க முடியல்லையே
மனுக்குலமே..... மனுக்குலமே..... சிந்தி..... தவறு.... எங்கே.....
என்று.....? சமாதானம்..... எப்போ..... தென்று....?
அதோ கழுதை கீழ்ப்படிகிறதே தன் எஜமானனுக்கு
இதோ மாடு தலை வணங்குகிறதே தன் ஆண்டவனுக்கு!!
நீயோ....? நீயோ....? எப்போது உணர்வாய்.....?
உன்னை உண்டாக்கின அவரை உணர்வாய்?
உன்னால் முடியாது – என்னால் முடியாது ....!
உன்னை இரட்சிக்க என்னை இரட்சிக்க உன்னால் என்னால் முடியாது...!!
தேவை பாவ தீயணைக்க தண்ணீர் ... ஞான தண்ணீர்!
பாவம் கழுவஇரத்தம்.... பரிசுத்த இரத்தம்!! – இயேசுவின் இரத்தம்/
இதோ .... உனக்காக எனக்காக .... மயிர் கத்தரிக்கிறவனுக்கு .... முன்பாக
சத்தமிடாதிருக்கிற .... அந்த அந்த அந்த...?
இதோ உலகத்தின் பாவத்தை தீர்க்கின்ற தேவ ஆட்டுக்குட்டி...! இயேசுவே

**Er. A. ஜெயபால்** Tuticorin.



பணித்தளம் : **முக்கூட்டுமலை** **மார்ச் 13**

சகோதரி. சுதாவுக்கு நல்ல வேலை கிடைக்க... சகோதரி. பியூலாவுக்கு வீடுகட்ட தேவைகள் சந்திக்கப்பட... சகோ. காளியப்பன் குடும்பத்தில் சமாதானம் உண்டாக... சகோ. ரெகு படிப்பிற்காக... சகோதரி. மகேஷிக்கு சகோதரி. கவிதா பெண் குழந்தை கிடைக்க... சகோ. இருதயராஜ மனந்திரும்ப... சகோதரி. புஷ்பலதாவிற்கு பெண் குழந்தை கிடைக்க... சகோ. பெத்தேல் வாசன் பிரிந்து இருக்கும் குடும்பம் ஒன்று சேர.... சகோ. ரவிகுமாரின் வேலை ஆசீர்வதிக்கப்பட...

பணித்தளம் : **சென்னல்குளம்** **மார்ச் 14**

சகோதரி. ஜெயா அவர்களுடைய அப்பா குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற... மகன் வினோத்குமார் இரட்சிக்கப்பட... மகளுக்கு திருமணமாகி 2 வருடமாக குழந்தை இல்லை. குழந்தை பாக்கியத்திற்காக... சகோதரி. சரஸ்வதி குடும்பம் இரட்சிக்கப்பட... சகோ. ராஜியின் அப்பா குடிப்பழக்கம் மாறி குடும்பமாக ஆலயத்திற்கு வர... சகோ. ராஜேஸ், சகோ. வைரமுத்து ஞானஸ்நானம் பெற தடைகள் நீங்க... சகோ. சரவணன் , சகோ. சதீஷ் தவறாமல் ஆலயம் வர... ராஜி, டயானா அரசுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற... சகோதரி. மெர்லின், சகோதரி. மகாலட்சுமி, காளியம்மா, கருப்பி, இருளப்பன் – சுப்புலட்சுமி, வேல்முருகன், சத்யா, புவனேஸ்வரி, உமா மகேஸ்வரி ஆலயம் வர...

பணித்தளம் : **புல்லலக்கோட்டை** **மார்ச் 15**

ஆலய காம்பவுண்டு சுவர் கட்டப்பட, தேவைகள் சந்திக்கப்பட... சகோதரி. வசந்தாவின் கடன் பிரச்சனை மாற... சகோ. போதிமுத்துவிற்கு கிட்னிகள் நல்ல முறையில் வேலை செய்ய... சபைக்கு வருகிற வாலிப சகோதரிகளுக்கு இரட்சிக்கப்பட்ட மணமகன்களை தரும்படியாக... சகோ. குபேந்திரராஜ் அவர்களுக்கு ஏற்ற துணை கிடைக்க... சிறுவர் கூடுகைகள் நடத்த இருக்கும் தடைகள் மாற... சகோ. அழகேசன் அவர்களுடைய குடும்பம் முழுவதும் இரட்சிக்கப்பட.... பின் மாற்றத்திலிருந்து இரட்சிக்கப்பட... சகோ. ஜேம்ஸ் அவர்களுடைய தகப்பனுடைய மனநோய் குணமாகி வீட்டிற்கு வர... கர்த்தர் கிரியை செய்ய... சகோதரி. செல்வி, சகோதரி தேவகனி அப்பாத்துரை ஆகியோர் வீட்டு ஜெப கூடுகைகள் ஆசீர்வதிக்கப்பட

### திண்டுக்கல் மாவட்டம்

பணித்தளம் : **தொப்பம்பட்டி** **மார்ச் 16**

சகோ. சின்ன அழகர்சாமி காலில் உள்ள புண் ஆற... சகோதரி. சின்னம்மாள் அவர்கள் வலது காலில் உள்ள வலி மாற... சகோதரி. அழகம்மாள், சகோ. ராஜாராம் காலில் உள்ள வலிகள் மாற... சகோ. ராஜாங்கம், சிதம்பரம், ஹரிராம், ராஜா, ரவி, ஜெயராம் இவர்கள் இரட்சிக்கப்பட... சகோதரி முத்தம்மாள், சகோ. பெரியண்ணா பின் மாற்றத்திலிருந்து மனந்திரும்ப... சகோதரிகள் மீனாட்சி, பாண்டியம்மாள் தொடர்ந்து ஆருாதனைக்கு வர... சகோதரி. ராசம்மாள், முனியம்மாள், வெள்ளையம்மாள் தொடர்ந்து ஆராதனைக்கு வர.... சகோதரி. ஆனந்த ஜோதிக்கு அடிக்கடி வருகின்ற தலைவலி சுகமாக... சகோதரிகள் காளியம்மாள், வொண்டியம்மாள், பொன்னம்மாள் ஆகியோர் இரட்சிக்கப்பட... சகோ. வேல்முருகன் குடும்பம் இரட்சிக்கப்பட... சகோதரி. செல்வராணிக்கு ஏற்ற வேளையில் திருமணம் நடக்க...

பணித்தளம் : **விராலிப்பட்டி** **மார்ச் 17**

ஊழியர்களின் பாதுகாப்பிற்காக... ஞானஸ்நானம் பெற்றவர்கள் இரட்சிப்பின் வழியில் நடக்க... சகோதரிகள். சின்னம்மா, இந்திராணி, சகோதரர்கள் ராமலிங்கம், பாண்டி, குமார், முருகன், பெரியபாண்டி, மலைச்சாமி, கருப்பையா, சக்திவேல், பாண்டி, முருகேசன், சகோதரி. ஈஸ்வரி இவர்கள் குடும்பமாக இயேசுவை ஏற்றுக்கொள்ள... சகோ. தங்கபாண்டி – சகோதரி. சித்ரா இவர்கள் குடும்பதிதில் சமாதானம் உண்டாக... இருவரும் ஒன்று சேர... சகோதரர்கள் காளியப்பன், ஜெயக்கொடி, நந்தகோபால், வெங்கடேஷ், சிவகுமார், மலைசாமி, கோட்டைசாமி இவர்களுடைய

அனுசியாவிற்கு கை, கால்கள் நன்றாக செயல்பட.... இயேசுவை ஏற்றுக் கொள்ள.... சகோதரி. மாரியம்மாள் இவர்கள் வீட்டை சரி செய்ய... தேவைகள் சந்திக்கப்பட... மகேந்திரன் என்ற தம்பிக்கு காதுகளில் உள்ள பிரச்சனை ஆப்ரேஷன் செய்யாமல் மாற... தூங்கா ரெட்டிபட்டியில் ஆலயம் சீக்கிரம் கட்டப்பட.... சகோதரி. பியூலாவிற்கு குழந்தை பாக்கியம் கிடைக்க.... சகோதரி. பராசக்தி அவர்கள் குடும்பம் இரட்சிக்கப்பட....

பணித்தளம் : **பண்டுதன்பட்டி**

சகோதரி. எஸ்தருக்கு காய்ச்சலிலிருந்து சரீர பலவீனத்திலிருந்து விடுதலை கிடைக்க.... சகோதரி. ஜெபத்தாய் குடும்பத்தில் பிரச்சனை நீங்க... சமாதானம் உண்டாக... சகோதரி. ரூத் குடும்பத்தில் உள்ள பிரச்சனை நீங்க... சகோதரி. வனிதாவிற்கு சுகப்பிரசவம் உண்டாக... சகோதரி. பியூலா ஆலய ஆராதனையில் கலந்து கொள்ள இருக்கும் தடைகள் நீங்க...

பணித்தளம் : **சிவகாசி** **மார்ச் 10**

சகோ. ஜார்ஜ் என்பவருக்கு வர வேண்டிய 3 மாத கூலி தடையின்றி வர... சகோதரிகள் சுபா, லீதியாள், சாரோன் ஆகியோருக்கு ஏற்ற ஞானம் கர்த்தர் தர... சகோ. கண்ணன் என்பவரின் மகளுக்கு கர்த்தர் ஏற்ற துணை கொண்டு வர... சகோதரி. தமிழரசி கர்த்தருக்குள் பலப்பட ஞானஸ்நானம் எடுக்க.... கோதரி ராஜகாமு சகோதரி கனகரத்தினம் இரட்சிக்கப்பட... சகோதரி. லில்லி புஷ்பம் அவர்கள் கடன் பிரச்சனை நீங்க... முத்துசாமிபுரத்தில் ஆலயம் கட்ட இடம் கிடைக்க... சகோதரி. லீதியாளுடைய திருமண காரியத்துக்காக சகோ. பிரபாகரன் அவர்களுடைய தொழில் ஆசீர்வதிக்கப்பட... சகோதரி. நவஸ்ரீதர் அவர்களுக்கு குழந்தை பாக்கியத்திற்காக...

பணித்தளம் : ஜமீன்சல்வார்பட்டி **மார்ச் 11**

நமது ஆலயத்துக்கு முன்பாக கம்பிவேலி சுற்றி போட, ஜன்னல்களுக்கு, கதவுகள் போட... தேவன் தேவைகளை சந்திக்க... ஊழியக்காரருக்கு இருசக்கர வாகனம் கிடைக்க... சகோதரி. எஸ்தர் திருமணம் ஆகி 22 ஆண்டு ஆகிறது குழந்தை பாக்கியத்துக்காக.... நாரணாபுரம், கல்போது, சொக்கலிங்கபுரத்தில் ஜனங்கள் ஆலயத்திற்கு வர.... தடைகள் நீங்க...

பணித்தளம் : மைப்பாறை

ஆலயத்தில் வெள்ளையடிக்க தேவைகள் சந்திக்கப்பட... சகோதரி. ராஜலட்சுமியின் கணவர் குடியிலிருந்து விடுதலை பெற... குடும்பம் இரட்சிக்கப்பட.... சகோ. சின்னக்கனி, சகோதரி அன்பு சின்னபாட்டி இரட்சிக்கப்பட... சகோதரி. அமுதா அம்மாளின் மகள் திருமணம் நல்ல முறையில் நடைபெற... அவர்கள் மகன் வெங்கடேசன் புத்தி சுவாதீனம் குணமாக... சகோதரி. ரெபேக்காள் கணவர் இரட்சிக்கப்பட.... சகோ. காசிக்கு நல்ல வேலை கிடைக்க... சகோ. சண்முகக்கனி ஐயா, மனைவியின் கால்புண் சீக்கிரத்தில் குணமாக...

பணித்தளம் : அய்யனேரி **மார்ச் 12**

சகோதரி. சுப்புலெட்சுமி அவர்கள் வீடு கட்டப்பட.... சகோ. இராமசாமியின் குடும்பம் இரட்சிக்கப்பட.... ஆலயம் கட்டப்பட அனுமதி கிடைக்க... சகோ. ஜெயசங்கர் மனைவி சுகப்பிரசவம் ஆக.... சகோதரி ராதா அவர்கள் மகனுக்கு இருக்கும் இரத்தப் புற்று நோய் குணமாக... சகோதரி செல்லம்மாள் கணவர் இரட்சிக்கப்பட...

பணித்தளம் : அப்பனேரி

சகோ. நாகராஜுக்கு வயிற்று வலி நீங்க.... சகோ. குருசாமி – சகோதரி. பேச்சியம்மாள் இரட்சிக்கப்பட... அவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க... சகோ. முத்துராசுவுக்கு நல்ல வேலை கிடைக்க... சகோதரி. ஜாய்ஸுக்கு இருக்கும் வயிற்றுப்புண் வேதனை நீங்க... சகோ. ரெகுநாதன் வலிப்பு வியாதி நீங்க... அரசுத் தேர்வு எழுதும் பொன் ராஜ், வேணி நல்ல மதிப்பெண்கள் எடுக்க.... சகோதரி. கனகலெட்சுமி குடும்பத்தில் சமாதானம் உண்டாக... சகோதரி. விஜயா குடும்பத்தில் சமாதானம் உண்டாக... சிறுவர் கூடுகைக்கு இருக்கும் தடைகள் நீங்க...



# "நிலையான அமைதியின் விலையென்ன?"

Dr. P. செல்வராஜ், கோவை

உலகமானது அமைதியைப் போரில்லாத நேரமென்று கருதுகிறது. இயேசு கிறிஸ்து கூறும் அமைதி வேறு. அவர் தம்முடைய சீடர்களிடம் கூறியதை கவனியுங்கள் : "சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்; உலகம் கொடுக்கிற பிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" (யோவான் 14:27)

அன்றை பிரிட்டிஷ் பிரதமர் நெவில் சேம்பர்லின் விமானத்தை விட்டு இறங்கும்போது ஆங்கிலேயே – ஜெர்மினிலே அமைதிக்கான உடன்படிக்கையை அசைத்துக் காட்டினார். அந்த அமைதி உடன்படிக்கை அறிக்கையானது நனவாகாத கனவாக மாறியது. அதுவும் வெகுவிரைவில். அடால்ஃப் ஹிட்லர் இரண்டாவது உலகப்போரையும் அப்பாவி மக்களைக் கொன்றுகுவிக்கும் திட்டத்தையும் துவக்கினார். இதுதான் உலகம் கொடுக்கும் அமைதி.

உன்மையான அமைதியென்பது பத்துக் கட்டளைகளின் முழுமையில் அடங்கியிருக்கிறது. மனிதர்கள் முழுஇருதயத்தோடும், முழு மனதோடும் தேவனுடைய அன்பின் பிரமாணத்தை மதித்துக் கீழ்ப்படியும்போது மனித உறவுகளில் அமைதியேற்படும். "நாம் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூறுவதாம்; அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல" (1யோவான் 5:3) "தேவனிடத்தில் அன்பு கூறுகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூருவான்?" (1யோவான் 4:20) "நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது" (யாக்கோபு 3:18). டச் தத்துவஞானி பரூச் ஸ்பினோசாவின் அமைதிக்கான விளக்கம் இதோ : "போரின்மை அமைதியல்ல; அஃதோர் நற்பண்பு, உளப்பாங்கு, இரக்கம், நம்பிக்கை மற்றும் நீதி". தேவன் அமைதியைப் பற்றி என்ன கூறுகிறாரோ அதற்கு மிக நெருங்கி வருகிறது ஸ்பினோசாவின் விளக்கம்.

இம்மையில் அமைதியையும் பாதுகாப்பையும், மறுமையில் அவற்றிற்கும் மேலானவற்றையும் தேவன் நமக்கு அருளுகிறார். "ஆகையால் இனிச்சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார்" (லூக்கா 21:36) நிலையான அமைதியை நம்முடைய வாழ்நாட்களில் நாம் காண்போமா? உலகின் நிகழ்வுகள் நாம் கடைசி நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதைத்தான் காட்டுகின்றன. தவறிழைக்க தேவன் ஒரு மனிதனல்ல. மனுக்குலத்திடமிருந்து மனுக்குலத்தைக் காக்க தாம் இயேசு கிறிஸ்துவை மீண்டும் இவ்வுலகிற்கு அனுப்பும் நாளை தேவன் ஒருவரே அறிவார். அதுவரை அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள், குமாரனும் அறியார்" (மாற்கு 13:32)

ஏசாயா தீர்க்கன் வரவிருக்கும் இயேசுவின் மகிமையான அமைதியான உலக ஆட்சியை இவ்வாறு வர்ணிக்கிறார்: "நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச் செய்து, பூமியைம் தமது வாக்கின் கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார்" நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச்செய்து, பூமியைத் தமது வாக்கின்கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார். நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைக்கச்சையுமாயிருக்கும். அப்பொழுது ஓனாய் ஆட்டுக்குட்டியோடே தங்கும், புலி வெள்ளாட்டுக்குட்டியோடே படுத்துக்கொள்ளும்; கன்றுக்குட்டியும், பாலசிங்கமும், காளையும், ஒருமித்திருக்கும்; ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான். பசுவும் கரடியும் கூடிமேயும், அவைகளின் குட்டிகள் ஒருமித்துப் படுத்துக் கொள்ளும்; சிங்கம் மாட்டைப்போல் வைக்கோல் தின்னும். பால் குடிக்குங்குழந்தை விரியன் பாம்பு வளையின்மேல் விளையாடும், பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும். என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும். ஏசா. 11:4-9.

சரி, இயேசுவின் இரண்டாம் வருகை வரை நிலையான அமைதி இவ்வுலகில் ஏற்படாது. அந்த நிலையான அமைதியின் விலையென்ன? தேவனுடைய கட்டளைகளை மதிப்பதும் அவற்றிற்குக் கீழ்ப்படிந்து வாழ்வதுதான். நிபந்தனையின்றி நாம் எதையும் பெற்றுக்கொள்வதில்லை. இரட்சிப்பிற்கு மனந்திரும்புதல் தேவை. நிலையான அமைதிக்குக் கீழ்ப்படிதல் தேவை. மனிதன் என்று அமைதியை இழந்தான்? ஏதேனில் ஆதாமின் கீழ்ப்படியாமையினால்தான்! இதோ, புதிய ஏதேனின் காலம் நம்மை நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆமென்!

## செய்திகள்

- தமிழகத்தில் மின் திருட்டில் ஈடுபட்டவர்களை பிடித்து அபராதம் விதித்ததில் மின் வாரியத்திற்கு ரூ. 37.73 கோடி வருமானம் கிடைத்துள்ளது.
- 2011ல் மக்கள் தொகை கணக்கெடுப்பில் 6 வயதுக்குட்பட்ட ஆண் பெண் குழந்தைகளின் விகிதம் 1000:946. தமிழகத்தில் கடலூர், அரியலூர் மாவட்டங்களில் 1000 ஆண்குழந்தைகளுக்கு 900க்கு குறைவான பெண் குழந்தைகளே உள்ளன. 1998ல் தமிழகத்தில் ஒரே ஒரு ஸ்கேன் மையம் தான் இருந்தது. இப்போது 4560 மையங்கள் உள்ளன. மேலும் 8 மரபனு ஆய்வு மையங்களும், 3943 அல்ட்ரா சவுண்ட் மருத்துவமனைகளும், 38 செயற்கை கருத்தரிப்பு மையங்களும், 11 ஆம்னியோ சென்டீசீஸ் மையங்களும் இயங்குகின்றன.

கருக்கலைப்பு சட்டப்படி 20 வாரங்களை தாண்டிய கருவை கலைப்பது சட்ட விரோதம். கடலூர், அரியலூர், பெரம்பலூர், விழுப்புரம், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் பெண் பிறப்பு விகிதம் மிகவும் குறைவாய் உள்ளது. 1992ம் ஆண்டு முதன்முதலாக சேலம் மாவட்டத்தில் தொட்டில் குழந்தை மையம் உருவாக்கப்பட்டது. பெண் குழந்தையை வளர்க்க முடியாது எனக் கருதுவோர் இந்த மையத்தில் குழந்தையை விட்டுச் செல்லலாம். 2001ம் ஆண்டு மதுரை, தேனி, ஈரோடு, திண்டுக்கல், நாமக்கல், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் தொட்டில் குழந்தை திட்டம் அமல்படுத்தப்பட்டது. இந்த மையங்களில் 3200 பெண் குழந்தைகளும் 582 ஆண் குழந்தைகளும் மீட்கப்பட்டிருக்கின்றன.



செய்ததற்காக... கலந்து கொண்ட பிள்ளைகளுக்காக.... சாயர்புரம் போப் மேல்நிலைப்பள்ளியில் மாணவர்கள் ஜெபத்தில் ஒவ்வொரு வாரமும் கலந்து கொள்ளும் 100 மாணவர்களுக்காக... சகோதரி சிவாவிற்கு தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் லேப் டெக்னிஷியன் பிரிவில் படிக்க இடம் கிடைத்ததற்காக... சகோதரி. பத்ரகாளிக்கு வயிற்றில் ஆப்பரேஷன் இல்லாமல் கட்டியைக் கரைத்துவிடலாம் என்றதற்காக... மிஷனெரி சகோதரி சாந்திராஜசேகருக்கு இந்த வருடம் இழுப்பு நோய் வராதபடி கர்த்தர் காத்ததற்காக... சகோதரி. விஜயா அவர்களுக்கு இருந்த கடனை அடைக்க தேவன் உதவி செய்ததற்காக....

பணித்தளம் : **பண்ணைவிளை** **மார்ச் 7**

சகோதரிகள் ஆஷா, அமுதா இவர்களில் திருமணத்தைக் கர்த்தர் நடத்திக் கொடுத்ததற்காக... சகோ. சுவர்ணராஜ் என்ற தம்பிக்கு லாரி வாங்க கிருபை செய்ததற்காக... சகோதரி. கவிதாவிற்கு குடும்பத்தில் கிடைத்த கவிதாவிற்கு குடும்பத்தில் கிடைத்த ஆறுதலுக்காக... சகோதரி பதுமராகத்திற்கு தேவன் சரீரத்தில் நல்ல சுகம் கொடுத்ததற்காக... சகோதரி சோனியாவின் தாயாருக்கு தேவன் சுகம் கொடுத்ததற்காக...

### திருநெல்வேலி மாவட்டம்

பணித்தளம் : **அழகப்பபுரம்**

சகோதரி. ராஜாத்தியின் மகன் ராஜா நம் ஆலயத்திற்கு ஒரு ஃபேன் கொடுத்ததற்காக... சகோ. மணி அவர்கள் நம் ஆலயத்திற்கு டிரம் செட் வாங்கி கொடுத்ததற்காக....

பணித்தளம் : **வடமலாபுரம்**

தர்மத்தூரணியில் ஆலயம் கட்டி முடித்து பிரதிஷ்டை செய்ததற்காக... சமத்துவ புரத்திலிருந்து தேவன் புதிய ஆத்துமாக்களைத் தந்ததற்காக... சகோ. கைலாசம் இவர்கள் குடும்பத்தில் கடன் பிரச்சனையிலிருந்து தேவன் கொடுத்த விடுதலைக்காக... சகோ. ஆனந்த் காலில் கால் அடிபட்டு 1 மாதமாக இருந்த வலியை நீங்கச் செய்ததற்காக...

பணித்தளம் : **என். திருவேங்கடபுரம்**

சகோ. பொன்னுச்சாமி ஆப்ரேஷன் முடிந்து சுகத்துடன் வீடு திரும்பியதற்காக.... ஆழ்துளை கிணற்றில் மின்மோட்டார் இணைக்கப்பட தேவன் கிருபை செய்தமைக்காக... இங்கு ஆலயத்திற்கு கழிவறை குளியல் அறை கட்டும் பணி நடைபெற தேவன் கிருபை அளித்தமைக்காக....

*முழங்காலில் ஜெபிப்போமா!!*

### விருதுநகர் மாவட்டம்

பணித்தளம் : **ஏழாயிரம்பண்ணை** **மார்ச் 8**

சகோதரி. இந்திரா அவர்கள் வீட்டில் பெண்கள் ஜெபம் ஆரம்பிக்கப்பட... சகோதரி. பாக்கியம் அவர்கள் வீட்டில் குடும்பப் பிரச்சனை நீங்க... புல்லக்கவுண்டன்பட்டியில் பெரியவர்கள் காலை 10 மணிக்குள் ஆலய ஆராதனைக்குக் கடந்து வர... அன்பின் நகரம், எலுமிச்சங்காய்ப்பட்டி, மேலபுதூர் கிராமங்களிலிருந்து திறப்பின் வாயில் ஜெபத்திற்கு பெரியவர்கள் கடந்து வர... சிவசங்கு பட்டியில் பிள்ளைகள் 15 பேர் கூடாரத்தில் வந்து ஜெபிப்பார்கள். இவர்களுடைய குடும்பங்கள் இரட்சிக்கப்பட... தர்ஷினி என்ற பத்தாவது வகுப்பு படிக்கும் தங்கை பயத்தின் ஆவியிலிருந்து விடுதலை பெற... சகோதரி. ஜெயமணியின் குடும்பத்தார் இயேசுவை ஏற்றுக்கொள்ள... சகோ. மரியசூசைக்கு சரீரத்தில் உள்ள பலவீனம் நீங்க... சகோதரி. மகாலட்சுமிக்கு மறுமணம் நடக்க... கூடாரத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கட்டிட வேலை சீக்கிரம் முடிய... தேவைகள் சந்திக்கப்பட...

பணித்தளம் : **முத்தாண்டியாபுரம்** **மார்ச் 9**

சகோதரி. ஜமுனா அவர்கள் வீட்டில் உள்ள சாபத்தீடானதை வெளியே தூக்கி எறிய உணர்வு உண்டாக... சகோ. சந்தனம் அவர்கள் குடும்பம் இரட்சிக்கப்பட... நன்றாக நடக்க... சகோதரி

### திண்டுக்கல் மாவட்டம்

பணித்தளம் : **தொப்பம்பட்டி** **மார்ச் 3**

சகோதரி. ராசம்மாள் காலில் உள்ள தடிப்பு மற்றும் வீக்கங்கள் சுகமாகி நன்றாக நடந்தபடியினால்..... சகோதரி. பழனியம்மாள் காய்ச்சல், தலைவலியிலிருந்து தேவன் சுகப்படுத்தியதற்காக...

### திருப்பூர் மாவட்டம்

பணித்தளம் : **தொட்டிப்பாளையம்**

தொட்டிப்பாளையத்தில் 2011ம் ஆண்டு வரை பழனிக்கு சென்ற சகோதரி தெய்வாள் ஆண்டவரை விசுவாசித்து வருகிறதற்காக.... புதுவருட ஆராதனையில் புதியதாய் வந்த 4 பேருக்காக... ஊழியத்துக்கு உதவி செய்யும் சகோதரி. மரகதவல்லி அவர்களின் மகள் கிரேஸ் (7 வயது) அவளின் நண்பர்கள் 7 பேர் விஷகாயை தெரியாமல் தின்றனர். எந்த ஒரு பாதிப்பும் ஏற்படாமல் கர்த்தர் பாதுகாத்ததற்காக...

### மதுரை மாவட்டம்

பணித்தளம் : **திரளி**

கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட ஆராதனைகளில் சுமார் 30 பேர் கலந்து கொண்டதற்காக... ஜனவரி 17ம் தேதி ஆலய பிரதிஷ்டையை தேவன் சிறப்பாக நடத்த கிருபை செய்ததற்காக... மனுஷாதேவிக்கு சுகப்பிரசவத்தில் ஆண் குழந்தை பிறந்ததற்காக...

### ஈரோடு மாவட்டம்

பணித்தளம் : **ஊத்துக்குளி** **மார்ச் 4**

வேலம்பாளையம் சகோதரி. விமலா இவர்கள் நவம்பர் மாதம் அவர்கள் பழைய வீட்டை இடித்து புதுப்பிக்கவும், நன்றாக கட்டி முடிக்கவும், தேவன் தேவைகளை சந்தித்ததற்காக...

### தூத்துக்குடி மாவட்டம்

பணித்தளம் : **ஆண்டாள்நகர்**

இந்த கிராமத்தில் இருக்கும் முதியோர் இல்லத்தில் ஒரு சகோதரி கடந்த 26-12-11 அன்று ஞானஸ்நானம் பெற கர்த்தர் கிருபை செய்ததற்காக... இந்த முதியோர் இல்லத்திலிருந்து வருகிற ஒருவர். நமது ஆலயத்திற்கு ஃபேன் வாங்க காணிக்கை கொடுத்துள்ளனர். இவர்களுக்காக... கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட ஆராதனையில் அநேக தேவ பிள்ளைகள் கடந்து வந்ததற்காக...

பணித்தளம் : **தாளமுத்துநகர்** **மார்ச் 5**

சகோ. அமிர்தராஜ டேனியல் சகோதரி ஃபிளாரன்ஸ் குடும்பத்தில் இருந்த பிரச்சனை மாறி மகிழ்ச்சியுடன் இருப்பதற்காக... சகோதரி அன்னம் வீடு கட்டுமான பணி சிறப்பாக நடைபெற்றமைக்காக... சகோதரி லதா திருமணம் சிறப்பாக நடைபெற்றமைக்கா... சகோ. வில்சன் குடும்பத்தில் இருந்த பிரச்சனை மாறி சமாதானமாய் வாழ கர்த்தர் உதவி செய்ததற்காக....

பணித்தளம் : **ஸ்ரீமூலக்கரை**

திருப்புளியங்குடியில் தேவன் ஊழியத்தை ஆசீர்வதித்து, ஆத்துமாக்களை தேவன் தந்தருளியதற்காக... போராட்டத்தின் மத்தியில் கட்டப்பட்டுவரும் ஜெபவீட்டை மேல் மட்டம் (roof) வரை கட்ட கர்த்தர் உதவி செய்ததற்காக....

பணித்தளம் : **பேட்மாநகரம்** **மார்ச் 6**

கிறிஸ்மஸ் ஆராதனையிலும் வருடப்பிறப்பு ஆராதனையிலும் இதுவரை ஆராதனைக்கு வராத பிள்ளைகள் 15 பேர் வந்ததற்காக...

ஸ்ரீவைகுண்டத்தில் 7ம் தேதி நடந்த ஸ்தோத்திர முகாமில் ஆகாரத் தேவைகளை சகோ. பரமானந்தம் குடும்பத்தினர் பொறுப்பெடுத்துக் கொண்டார்கள். தேவன் முகாமை ஆசீர்வதித்ததற்காக... ஆயத்துறையில் 8ம் தேதி சிறுவர் முகாம் நடத்த தேவன் உதவி



# சிலுவையிலிருந்து தேவ பெலன்

சகோ. B. பொற்செல்வன் ஆசீர்

சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது. இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெனாயிருக்கிறது. 1கொரி. 1:18.

சிலுவை என்பது ரோமருக்கு அவமானத்தின் சின்னம்; யூதருக்கு அந்த சிலுவை சாபத்தின் சின்னம். கிரேக்கருக்கு அதே சிலுவை இடறுதலின் சின்னம். ஆனால் கிறிஸ்துவை விசுவாசிக்கிற ஜனத்திற்கோ சிலுவை வெற்றியின் இரகசியம். அந்த சிலுவை கிறிஸ்துவை விசுவாசித்து, அவர் பாதையில் நடக்க வாஞ்சிக்கும், நடக்கும் ஒவ்வொருவருக்கும் தேவபெலன். இது பவுலின் வெறும் வார்த்தைகள் மட்டுமல்ல சொந்த அனுபவமும் கூட.

## நரகத்தின் மேல் வெற்றி

சிலுவை நரகத்தை வெல்லும் பெலன் உடையதாகும். இயேசுவோடு இரு கள்வர்களையும் சிலுவையில் அறைந்தார்கள். (லூக். 23:33) இயேசுவோடு அறையப்பட்ட குற்றவாளிகள் இருவரும் இயேசுவை, சிலுவையில் தொங்கின இயேசுவை நோக்கிப் பார்த்தார்கள்.

ஒருவன் நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக் கொள் என்று (லூக். 23:39) இகழ்ச்சியோடு, சிலுவையில் தொங்கின இயேசுவை நோக்கிப் பார்த்தான். அவன் தன் ஓட்டத்தை நம்பிக்கையற்றவனாகவே முடித்தான்.

மற்றவன் தனது பாவத்தை உணர்ந்து நாம் நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம் (லூக். 23:41) என்று தனது பாவ நிலையை ஒத்துக்கொண்டான். தனது பாவ நிலையை ஒத்துக்கொண்டது மாத்திரமல்ல இயேசுவைகுறித்து இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே (லூக். 23:42) என்று இயேசுவை பரிசுத்தராக காண்கிறான். அவர் பரிசுத்தர் என்பதை அறிக்கையிடுகிறான்.

தான் பாவி என்று ஒத்துக்கொள்ளுகிறவனுக்கு; தன் பாவநிலையை காண்கிறவனுக்கு தேவன் தனது பரிசுத்தத்தை வெளிப்படுத்த தவறுவதேயில்லை. தேவனின் பரிசுத்தத்தை கண்ட, மெய்மனஸ்தாபங்கொண்ட மனிதனுக்கு தேவன் இரட்சிப்பின் வழியை தெரிவிக்க தவறுவதேயில்லை.

தேவனின் பரிசுத்தத்தைக் கண்ட அவன் தேவனின் இரட்சிப்பின் வழியை கண்டது மாத்திரமல்ல, அதன் நிச்சயத்தையும் பெறுகிறான். அதுதான் அவனது ஜெபத்தில் தொனிக்கிறது. ஆண்டவரே நீர் உம்முடைய இராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் (லூக். 23:42) இதுதான் அவன் ஜெபம்.

நீங்களும் இதுவரை மீட்கப்படாதிருக்கலாம். இன்று நீங்கள் பாவி என்று ஒத்துக் கொண்டு உங்கள் பாவங்களை அறிக்கையிட்டால் இயேசு கல்வாரி சிலுவையில் சிந்தின அவருடைய இரத்தம் உங்கள் பாவங்களை நீக்கி சுத்திகரிக்கும் (1யோவா. 1:7) என்பது நிச்சயம்.

### மகிமையில் பரமனோடு

இயேசுவே அடைக்கலம் ஊழிய ஸ்தாபகர் சகோ. D. அருள்ராஜ் அவர்கள் சென்னை கடந்த 19-2-2012 ஞாயிற்றுக்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். வருத்தத்துடன் தெரிவிக்கிறோம். அவர்கள் விட்டுச் சென்ற ஊழியத்திற்காக, குடும்பத்திற்காக ஜெபியுங்கள். சகோதரர் அவர்களை 1979 முதல் அறிவேன். அவர்களோடு தேவன் கொடுத்த சில ஐக்கிய வேளைகளுக்காக தேவனைத் துதிக்கிறேன்.

சிலுவையிலிருந்து நாம் பெற்றுக்கொள்வது முதலாவது நரகத்தின் மேல் வெற்றி!

பாவத்தின் ஆக்கினை நரகத்திலுண்டு! இரட்சிக்கப்படுகிற மனிதன் நரகத்தின் ஆக்கினைக்கு நீங்கலாக்கப்பட்டு தேவனோடு பரதீசில், பரலோகத்தை சுதந்தரிக்கும் பாக்கியத்திற்கு சுதந்திரவாளியாகிறான். இந்த ஆசீர்வாதமான வெற்றியை சுதந்தரிக்க இன்றே இயேசுவை ஏற்றுக்கொள்ளுங்கள்.

**பாவத்தின் மேல் வெற்றி**

மீட்கப்பட்ட மனிதன் நரக ஆக்கினையினின்று விடுதலையாகிறான். அவனுடைய சிறுவயது பாவங்கள் முதல் யாவும் இயேசு சிலுவையில் சிந்தின இரத்தத்தினால் மன்னிக்கப்பட்டு அவன் நீதிமானாக்கப்படுகிறான். மீட்கப்பட்ட மனிதனை சுற்றி நெருங்கி நிற்கிறது பாவம் என்கிறது (எபி. 12:1) வேதம். இந்த சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தை தள்ளிவிட்டு பொறுமையோடு நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஓட்டத்தில் ஓட அழைக்கப்பட்டிருக்கிறோம்.

இந்த சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தை ஜெயிப்பது எப்படி? அந்த வெற்றியை தருவதும் சிலுவையே. இதைதான் எபே. 5:27 கூறுகிறது. கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக (சபைக்காக) ஒப்புக்கொடுத்தார் என்று இயேசுவின் சிலுவை மரணத்தை நாம் பாவத்தை ஜெயிக்கும் வழியாக தெரிவிக்கிறது. இந்த வெற்றியைத்தான் ரோமர் 6:14; ரோமர் 8:2 ஆகிய வசனங்களிலும் காண்கிறோம்.

இரட்சிக்கப்பட்ட மனிதன் தினமும் தன்னை நெருக்கும் பாவத்தை ஜெயித்து பரிசுத்தவானாய் தன்னை காத்துக்கொள்ள கிறிஸ்துவின் சிலுவையின் பாடுகளே அவர் சிந்தின இரத்தத்தின் வல்லமையே நம்மை வழி நடத்துகிறது.

பாடுகளின் மேல் வெற்றி

மெய்யாகவே அவர் (இயேசு) நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு நம்முடைய துக்கங்களை சுமந்தார் (ஏசாயா 53:4) சிலுவையில் இயேசு நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல நம்முடைய பாடுகளையும், துக்கங்களையும் சேர்த்து சுமந்து தீர்த்தார். எனவே இயேசுவை ஏற்றுக்கொண்ட மக்கள் வாழ்வில் பாடுகள் வரலாம். செங்கடல் போன்ற போராட்டம் வரலாம். இவைகளை இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய துணையால் உலர்ந்து போகப்பண்ணி, தேவனுடைய துணையால் செங்கடலை பிளந்து அவைகளின் வழியாய் எந்த சேதமும் இல்லாமல் நடந்ததுபோல் நாமும் நம்முடைய வாழ்வில் ஜெயம் பெற முடியும்.

அநேகர் யோர்தான் போன்ற சோதனையே வரக்கூடாது; செங்கடல் போன்ற போராட்டங்களே வரக்கூடாது என்று எண்ணுகின்றனர். தேவபிள்ளையே வேதம் எங்கும் உங்கள் வாழ்வில் பாடுகளே வராது என்றோ, சோதனைகளே வராது என்றோ, வேதனைகளே வராது என்றோ கூறவில்லை. ஆனால் அவைகள் உங்களை குறைந்து போகப்பண்ணுவதில்லை. யோபுவை 2 மடங்கு ஆசீர்வதித்த தேவன் இன்றும் ஜீவிக்கிறார் அவரை விசுவாசியுங்கள்! ஜெயம் கொள்ளுவீர்கள்.

இயேசு நமக்காக சுமந்து தீர்த்தவைகள் எவை ஆதி மனிதன் செய்த பாவத்தின் மூலம் மனிதன் அடைந்த எல்லாவற்றையும் இயேசு சிலுவையில் சுமந்து தீர்த்து விட்டார்.

ஆதியாகமம் 3ம் அதிகாரம் பாவத்தினிமித்தம் வந்தவைகளை பட்டியல் படுத்துகிறது.

| | | |
|---|---|---|
| 1. | ***பயம்...*** | பயந்து ஒளித்துக் கொண்டேன் வச 10 |
| 2. | ***வேதனை...*** | உன் வேதனையை மிகவும் பெருகப் பண்ணுவேன் வச 16 |



| | | |
|---|---|---|
| 3. | ***சாபம்...*** | பூமி உன்னிமித்தம் சபிக்கப்பட்டிருக்கும். வச 17 |
| 4. | ***வருத்தம்....*** | வருத்தத்தோடே அதின் பலனை புசிப்பாய் வச 17 |
| 5. | ***முள்...*** | அது உனக்கு முள்ளும் குருக்கும் முளைப்பிக்கும் வச 18 |
| 6. | ***வேர்வை....*** | உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய் வச 19 |
| 7. | ***மரணம்....*** | என்றைக்கும் உயிரோடிராதபடிக்குச் செய்ய வேண்டும் வச 22 |

பாவத்தில் வந்த இவைகள் மேல் இயேசு சிலுவையில் ஜெயம் எடுத்துவிட்டபடியால் கீழ்க்கண்டவைகளை நமக்கு கிறிஸ்துவுக்குள் சுதந்தரமாயிருக்கிறது.

| | | |
|---|---|---|
| 1. | **தைரியம்** | தைரியமாய்க் கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம் எபி. 4:16 |
| 2. | **சுகம்** | அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் |
| 3. | **ஆசீர்வாதம்** | நீங்கள் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்(றோம்) 1பேதுரு 3:9 |
| 4. | **சமாதானம்** | (இயேசு) என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன் யோவா. 14:27 |
| 5. | **கிரீடம்** | கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தை பெறுவான். யாக். 1:12 |
| 6. | **வெண்வஸ்திரம்** | வெள்ளை அங்கிகளைத் தரித்து.... வெளி. 7:9 |
| 7. | **நித்திய ஜீவன்** | தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன். ரோமர் 6:23 |

எனவே நாம் தைரியமாய்ச் சொல்லலாம் சிலுவையைப் பற்றிய உபதேசம் இரட்சிக்கப்படுகிற நமக்கோ தேவபெலனாயிருக்கிறது. ஆமென்.

## *தேவனைத் துதிப்போம்! வாருங்கள்!*

**விருதுநகர் மாவட்டம்**

பணித்தளம் : **சிவகாசி** **மார்ச் 1**

முத்துசாமிபுரம் எனும் ஆலயம் இல்லாத கிராமத்தில் முதன்முதலில் கிறிஸ்மஸ் நற்செய்திக் கூட்டம் நடத்த கர்த்தர் தந்த திறந்த வாசலுக்காய் கர்த்தரைத் துதிப்போம். நாரணாபுரம் எனும் கிராமத்தில் திருமணமாகி மூன்று ஆண்டுகள் கழித்து சகோ. அந்தோணி என்பவரின் மனைவிக்கு கர்த்தர் கொடுத்த கர்ப்பத்தின் கனிக்காக....

பணித்தளம் : **ஜமீன் சல்வார்பட்டி**

நமது சபையில் இவ்வாண்டு 8 பேர் ஞானஸ்நானம் எடுக்க கர்த்தர் கொடுத்த கிருபைக்காய் துதிப்போம். நமது மிஷனெரி சகோ. ஞானராஜ் அவர்களின் மூத்தமகன் மணிராஜ்க்கு கர்த்தர் அசாமில் தனி ஊழியத்தை ஸ்தாபனத்தின் மூலம் தந்ததற்காக...

பணித்தளம் : **பண்டுதன்பட்டி** **மார்ச் 2**

சகோ. சண்முக சுந்தரம் சளித்தொல்லையினால் அவதிப்பட்டு மரணப்படுக்கையில் இருந்தவருக்கு கர்த்தர் கொடுத்த விடுதலைக்காக... சகோதரி. வெங்கடம்மாள் சுகர் வியாதியினாலும், தலை வலியினாலும், மயக்கத்திலும் பாதிக்கப்பட்டவருக்கு தேவன் கொடுத்த விடுதலைக்காக... சகோ. கிறிஸ்தியான், சகோதரி வீரம்மாள் குடும்பத்தில் ஏற்பட்ட போராட்டத்திலிருந்து கர்த்தர் கொடுத்த விடுதலைக்காக....

பணித்தளம் : **புல்லலக்கோட்டை**

ஆலயத்தை வெள்ளையடிப்பதற்கு தேவைகளை கர்த்தர் சந்தித்ததற்கா... சித்தூர் நாம் சந்தித்து ஜெபிக்கிற சகோதரி வசந்தாவிற்கு கர்த்தர் புதிய வீடு கட்டி தந்ததற்காக... ஆலயத்திற்கு புதிய உண்டியல் ஒன்று ரூ. 2900/- மதிப்பில் சகோதரி பொம்மி அவர்கள் கொடுத்ததற்காக....